# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2012.11.12 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## கடற்படை (திருத்தம்)

**கடற்படைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 3.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகமானது (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் உட்பிரிவு (1) இற்கான காப்பு வாசகத்தைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, கடற்படைச் சட்டத்திற்கு அமைவாகவிருப்பதினின்றும் இல்லாதொழிந்துள்ளவர்களான ஆட்களுக்கெதிராக எக்காலப்பகுதிக்குள் சட்டத்தின்கீழ் விசாரணை செய்யப்படலாமோ, அக்காலப்பகுதியை இரண்டு வருடத்திலிருந்து ஆறு மாதங்களுக்குக் குறைப்பதற்கானதாகும்.

# கடற்படை (திருத்தம்)

*ச.வ.ஓ. 26/2012*

## கடற்படைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கடற்படை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*358 ஆம் அத்தியாயத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** 1993 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான கடற்படைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவானது, அப்பிரிவின் உட்பிரிவு (1) இற்கான காப்பு வாசகத்தில், "அத்தகைய தவறு கண்டு பிடிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்த பின்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய தவறு புரியப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்கள் கழிந்த பின்னர்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் *15* ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்